# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 13.05.2026**

**முன்னிலை**

**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 269/F/2025**

திரு.பி.வேலுமணி .. மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுதகவல் அலுவலர்/
துணை பதிவாளர் (வீட்டுவசதி),
துணை பதிவாளர் (வீட்டுவசதி) அலுவலகம், .. பொது அதிகார அமைப்பு
கோயம்புத்தூர் மண்டலம்,
கோயம்புத்தூர் மாவட்டம்-641038.

**ஆணை**

இவ்வாணையத்தில் இன்று 13.05.2026 நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு.பி.வேலுமணி அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள் 2012, விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத்தகவல் அலுவலர் செல்வி.மு.கார்த்திகைசெல்வி, கூட்டுறவு சார்பதிவாளர் / கண்காணிப்பாளர், துணைப்பதிவாளர் (வீட்டுவசதி) அலுவலகம், கே.கே.புதூர், கோவை அவர்கள் ஆஜரானார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ், 11/06/2024 தேதியிட்டு தாக்கல் செய்துள்ள மனுவில் திருப்பூர் மாவட்ட உடுமலைப்பேட்டை வட்ட கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தின் Secretary R.பாலசுப்ரமணியம் அவர்களின் பணிப்பதிவேடு நகல் என்பன போன்ற 10 இனங்களில் தகவல்களைக் கோரியுள்ளார்.

3. அம்மனுவைப்பெற்ற பொதுத்தகவல் அலுவலர் 20.06.2024 நாளிட்ட கடிதம் மூலம் சட்டப்பிரிவு 6(3)ன் கீழ் மனுவினை உரிய பொது அதிகார அமைப்பிற்கு மாற்றம் செய்துள்ளார். அதனைப் பெற்ற பொதுத்தகவல் அலுவலர் 02.07.2024 நாளிட்ட கடிதம் மூலம் தகவல் வழங்கியுள்ளார். மனுதாரர் தனக்கு சரியான தகவல் வழங்கவில்லை என தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 19(1)ன் கீழ் 29.08.2024 நாளிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டு அலுவலருக்கு தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் 17.10.2024 நாளிட்ட கடிதம் மூலம் தகவல் வழங்கியுள்ளார். இந்நிலையில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 19(3)ன் கீழ் 03.01.2025 நாளிட்ட இரண்டாம் மேல்முறையீட்டு மனுக்களை ஆணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (13.05.2026) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

4. இன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜரான பொதுதகவல் அலுவலர் மனுதாரர் 6(1) மனுவில் கோரிய இனங்கள் குறித்து 02.07.2024, 17.10.2024 மற்றும் 17.11.2024 தேதியிட்ட கடிதங்கள் மூலம் இனம் வாரியாக தகவல்கள் வழங்கப்பட்டிருப்பதாக கூறி அதற்கான ஆவணங்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணையில் ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களை பரிசீலனை செய்கையில் மனுதாரர் 6(1) மனுவில் கோரிய தகவல்கள் மனுதாரருக்கு 02.07.2024, 17.10.2024 மற்றும் 17.11.2025 நாளிட்ட கடிதங்கள் மூலம் வழங்கியிருப்பதை உறுதி செய்து இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

**ஒம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 269/F/2025</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுதகவல் அலுவலர்/
துணை பதிவாளர் (வீட்டுவசதி),
துணை பதிவாளர் (வீட்டுவசதி) அலுவலகம்,
கோயம்புத்தூர் மண்டலம்,
கோயம்புத்தூர் மாவட்டம்-641038.

**<u>மேல்முறையீட்டாளர்:-</u>**

திரு.பி.வேலுமணி,
மரவபாளையம் அஞ்சல்,
சென்னிமலை வழி, காங்கயம் வட்டம்,
திருப்பூர்-638051.

Copy to file: KR/PA